# மாசு ஏற்படுத்தாத, 'எலக்ட்ரிக் கார்' 10 இடங்களில், 'சார்ஜிங் பாயின்ட்'

– நமது நிருபர் –

சுற்றுச்சூழலை பாதிக்காத, 'எலக்ட்ரிக்' வாகனங்களை, 'சார்ஜ்' செய்யும் மையங்களை, தமிழகத்தில், முதல் முறையாக, 10 இடங்களில் அமைக்க, மத்திய அரசின், 'எனர்ஜி எபிஷியன்சி' நிறுவனம் முடிவு செய்து உள்ளது.

பெட்ரோலிய பொருட்கள் இறக்குமதியால், மத்திய அரசுக்கு, பல ஆயிரம் கோடி ரூபாய் செலவு ஏற்படுகிறது. பெட்ரோல், டீசல் பயன்பாட்டால், சுற்றுச்சூழலும் மாசடைகிறது.

## அறிவுறுத்தல்

இந்த பிரச்னையை களைய, மாசு ஏற்படுத்தாத, 'பேட்டரி'யால் இயங்கும், கார், பைக் உள்ளிட்ட, எலக்ட்ரிக் வாகனங்களை பயன்படுத்தும்படி, மக்கள் அறிவுறுத்தப்படுகின்றனர். அந்த வாகனங்களுக்கு, மானிய சலுகையும் வழங்கப்படுகிறது.

மத்திய அரசின், எனர்ஜி எபிஷியன்சி நிறுவனம், குறைந்த மின்சாரத்தில் இயங்கும், 'எல்.இ.டி., பல்பு, டியூப் லைட்' உள்ளிட்ட சாதனங்களை விற்பனை செய்கிறது.

இந்நிறுவனம், மாநில அரசுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து, அரசு துறைகளுக்கு தேவையான, எலக்ட்ரிக் வாகனங்களையும், 'சப்ளை' செய்கிறது.

எனர்ஜி எபிஷியன்சி நிறுவனம், தமிழகத்திலும், அரசு துறைகளுக்கு, எலக்ட்ரிக் வாகனங்களை வழங்க முன்வந்துள்ளது. ஆனால், அந்நிறுவனத்திடம் இருந்து, அதை வாங்க, அரசு துறைகள் ஆர்வம் காட்டாமல் உள்ளன.

## தனி கொள்கை

இதுகுறித்து, எரிசக்தி மேம்பாட்டு முகமை அதிகாரி ஒருவர் கூறியதாவது:

பல மாநில அரசுகள், தங்கள் மாநில நிலவரத்திற்கு ஏற்ப, எலக்ட்ரிக் வாகனங்கள் பயன்பாட்டிற்கு என, தனி கொள்கை வெளியிட்டு உள்ளன.

ஆந்திரா, குஜராத், கர்நாடகா உட்பட, 14 மாநில அரசுகள், எலக்ட்ரிக் வாகனம் குறித்த பணிகளை கவனிக்கும், ஒருங்கிணைப்பு நிறுவனங்களையும் நியமித்து விட்டன.

தமிழக அரசு, கொள்கையும் வெளியிடாத நிலையில், ஒருங்கிணைப்பு நிறுவனத்தையும் நியமிக்கவில்லை.

இருப்பினும், எனர்ஜி எபிஷியன்சி நிறுவனம், தமிழகத்தில், எலக்ட்ரிக் வாகனங்களை சார்ஜ் செய்யக்கூடிய மையங்களை, 10 இடங்களில் அமைக்க திட்டமிட்டு உள்ளது.

முதல் கட்டமாக, சென்னையில், ஐந்து மெட்ரோ ரயில் நிலையங்களில், அவை அமைக்கப்பட உள்ளன.

அவற்றின் விபரம் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. சார்ஜ் செய்ய கட்டணம் உள்ளிட்ட விபரங்களும், விரைவில் தெரிய வரும்.

இவ்வாறு, அவர் கூறினார்.